## **DEPOSITION OF WITNESS**

---

IN THE COURT OF CHIEF JUDGE, SMALL CAUSES, CHENNAI

**M.C.OP.No. 5944/2019** **DATE :18.07.2024**

Deposition of Witness : P.W.1
Name : Mrs. Syedali Fathima
Father/Husband Name : Mr. Shagul Hameed
Age :
Address :
Cell Phone No :

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Act 44 of 1969) of the 18th day of July 2024..

-----------------------------------------------------------------------------------------------

**இறந்தவரின் கடவுச்சீட்டு, Gas பில், X-Rays, Scan report மற்றும் விற்பனை ஆவணத்தின் நகல் ஆகியவை தரப்பினர்களின் ஒப்புதலுடன் மசாஆ 21 முதல் 25 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு 1வது எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. மசாஆ 5ல் இறந்தவரின் தலை மற்றும் தலை சார்ந்த பகுதியில் எந்த பாதிப்பும் இல்லை என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிரேத பரிசோதனை அறிக்கையின் படி என் கணவருக்கு இதய நோய் இருந்ததாகவும் அதன் காரணமாக இறந்ததாகவும் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் கணவர் தனியாக அலுவலகம் அமைத்து வழக்கறிஞர் தொழில் நடத்தியதாக பிரமாண வாக்குமூலத்தில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான்.

2. மசாஆ 17ன் படி என் கணவர் வெளி நோயாளியாகத்தான் சிகிச்சை பெற்றுள்ளார் என்றால் சரிதான். மேற்படி விபத்து பதிவேட்டில் மார்பு பகுதியில் எலும்பு முறிவு எதுவும் இருந்ததாக சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. மசாஆ 18ல் நான் வெளிநோயாளியாக சிகிச்சை பெற்றதாகத்தான் காணப்படுகிறது என்றால் சரிதான். Scan எடுத்த பிறகு admit செய்தார்கள். நான் தற்சமயம் தாக்கல் செய்துள்ள என் கணவரின் கடவுச்சீட்டு மற்றும் கேஸ் பில் ஆகியவற்றிற்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

3. மசாஆ 23 மற்றும் 24 ஆகியவை என் கணவரின் வலது கால் மற்றும் இடது கை சம்பந்தப்பட்டவை என்றால் சரிதான். X-ray க்கஞுடன் மருத்துவரின் அறிக்கை எதையும் நான் தாக்கல் செய்யவில்லை. மேற்படி காரணங்களினால் மேற்படி X-Rayக்கள் யாருக்காக எடுக்கப்பட்டது என்று சொல்ல இயலாது என்றால் சரியல்ல. மசாஆ 25 இந்த வழக்கிற்கு சம்பந்தப்படாத ஆவணம் என்றால் சரியல்ல.

4. என் கணவரின் வருமானம் சம்பந்தப்பட்ட ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை. தவறான சங்கதிகளின் அடிப்படையில் எதிர்மனுதாரர் மீது இவ்வழக்கு பொய்யாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**2வது எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

**மேற்கண்ட குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**மறு விசாரணை** - இல்லை.

Taken down by me/before me in open Court, interpreted/read over to the Witness and admitted by him/her to be correct.
Date:18.07.2024.

Sd/- D. Lingeswaran,
Chief Judge,
Court of Small Causes.